Registered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (7-4-66) இதழ் 59

விசுவாவசு பங்குனி 25 துல்ஹஜ் பிறை 15 வியாழக்கிழமை

## ஜேப்படித் திருடர் மீது பொலிசார் கண்காணிப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் பஸ்நிலையத்திலும் மற்றும் முக்கிய இடங்களிலும் முடிச்சுமாறிகள் அதிகரித்துவருவதைத்தொடர்ந்து யாழ்ப்பாணம் பொலிசார் இவர்கள்பற்றி தீவிர கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளனர். ஜேப்படித் திருட்டில் கைவந்தவர்களெனக் கருதப்படுபவர்கள் பஸ்நிலையத்தில் நடமாடுவதைப் பொலிசார் அவதானித்து கண் வைத்துவருகின்றனர். இதன்பயனுக சென்ற திங்கட்கிழமை யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில், ஜேப்படித் திருடர்களென்ற சந்தேகத்தின் மீது பதினைந்து பேர்களை, இன்ஸ்பெக்டர் சவுந்தரநாயகம் கோஷ்டியினர் கைதுசெய்தனர். இவர்கள் அடையாளம் காணும்பொருட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர். (ந. நி.)

# பனம்பொருள் ஆராய்ச்சி - வெளிநாட்டில் பயிற்சி

## 1000 ஏக்கரில் உருளைக் கிழங்கு சாகுபடி செய்ய யோசனை

### எம். பி.க்களின் மகாநாட்டில் உணவு மந்திரி விளக்கம்

யாழ்ப்பாணம், வியாழன்

பனம்பொருள் ஆராய்ச்சயில் பயிற்சி பெறுவதற்காக வெளிநாட்டுக்கு ஒருவரை அனுப்புவதற்கு உணவு விவசாய அமைச்சர் திரு. எம். டி. பண்டா சம்மதம் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணப் பகுதியில் ஆயிரம் ஏக்கர் நிலத்தில் உருளைக்கிழங்கு உற்பத்திசெய்ய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் அமைச்சர் தெரிவித்திருக்கின்றார். யாழ்ப்பாணப்பகுதி எம். பி. க்களின் மகாநாட்டில் இவற்றை அவர் கூறினர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 1000 ஏக்கர் நிலத்தில் உருளைக்கிழங்கு சாகுபடி செய்யக்கூடிய வாய்ப்புண்டென்றும் தற்போது 76 ஏக்கரில் மட்டுமே பயிரிடப்பட்டிருப்பதாயும் உணவு-விவசாய அமைச்சர் திரு. எம். டி. பண்டா நேற்று யாழ்ப்பாணம் அரசாங்கச் செயலகத்தில் நடைபெற்ற எம். பி.க்களின் மகாநாட்டில் எடுத்துரைத்தார்.

உருளைக்கிழங்கு உற்பத்திக்குப்பதில் பயறு உழுந்து முதலான சிறு தானியங்களைப் பயிரிட்டால் அதிக பயன் கிடைக்குமென்றும் உருளைக்கிழங்கால் அதிகம் கிடைக்கக்கூடிய பயனெதுவுமில்லையென்றும் பருத்தித்துறை எம். பி. இச்சமயத்தில் தெரிவித்தார்.

இம்மகாநாட்டில் எம்.பிக்கள், கூட்டுறவு இலாகாவின் முக்கிய அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

உணவுப் பொருட்களை உற்பத்தியாக்கும் விவசாயிகளுக்குள்ள கஷ்டங்கள் முதலிய பிரச்னைகளும் அங்கு ஆராயப்பட்டன.

உபஉணவுப் பொருட்களின் இறக்குமதிக்காகப் பயன்படும் வெளிநாட்டுச் செலாவணியை கைத்தொழில் கமத்தொழில் ஆகியவற்றின் இயந்திர சாதன இறக்குமதிக்காகப் பயன்படுத்தவேண்டுமென அங்கு குறிப்பிட்ட அமைச்சர் திரு. பண்டா தற்போது இலங்கையில் எப்பாகத்திலும் சரி உணவு விவசாய ஆலோசனைக் கமிட்டிகள் சரிவர இயங்கவில்லையென்றும் அவை விவசாயிகளின் ஒத்துழைப்புடன் பணி புரிந்தால் குறிப்பிட்ட இலக்கை விரைவில் அடையலாமென்றும் பொதுவாக தவறுகள் நிலவுவதைத் தடுக்க எம். பி. க்களின் உதவி அவசிய

(6-ம் பக்கம் பார்க்க)

## மிகிர்சென்!

### பாக்கு நீரிணையை நீந்திக்கடந்த முதல் வீரர்

புதுடில்லி, ஏப். 6

பாக்கு நீரிணையை நீந்திக்கடந்த முதல் வீரர் மிகிர்சென் தான் என்று இன்று அறிவிக்கப்பட்டது.

இலங்கையிலிருந்து இந்தியக் கரைக்கு ஏற்கனவே இ இலங்கையர்கள் நீந்தியிருக்கிறார்கள். ஆனால் மன்னரிலிருந்து தனுஷ்கோடி வரையுள்ள பாக்கு நீரிணையை முதன் முறையாக மிகிர்சென் தான் நீந்தியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

திரு மிகிர்சென் பாக்கு நீரிணையை நீந்திக்கொண்டிருந்த பொழுது அலைகளின் கடும் தாக்குதலை சமாளிக்க வேண்டியிருந்ததோடு கடல் பிராணிகளிடமிருந்தும் தப்பவேண்டியிருந்ததாம் ஒரு கட்டத்தில் சுமார் 4 டி நீளமான கடல் பாம்பொன்று அவரைத் தாக்க வந்தபோது இந்தியக் கடற்படையினர் அதைச்சுட்டுக் கொன்றனர் திரு மிகிர்சென்னின் கால் கை விரல்களும் உதடுகளும் வீங்கியிருப்பதாகவும் தசைகளில் கடும் வலி ஏற்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது

## 30 யார்துணி!

### வர்த்தக மந்திரியின் புதிய ஏற்பாடு

கொழும்பு, புதன்

மரணக் கிரியைகளுக்கு 30 யார் இந்தியன் காரிக்கன் துணி வழங்கு

(6-ம் பக்கம் பார்க்க)

## பிரதமர் டட்லிக்கு இன்று மகாராணி விருந்து

### அடுத்தவாரம் நாடு திரும்புவார்

லண்டன், ஏப்ரல் 6

பிரிட்டிஷ் மகாராணி எலிஸபெத் நாளை வின்சர் மாளிகையில் அளிக்கும் விருந்தில் இலங்கைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா விருந்தினராகக் கலந்து கொள்வார்.

பிரதமர் அடுத்த வாரம் முற்பகுதியில் இலங்கை திரும்ப தற்காலிகமாகத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

நேற்று டௌனிங் வீதி 10-ம் இலக்க பிரிட்டிஷ் பிரதமரின் இல்லத்தில் நடைபெற்ற பகல் விருந்தின் போது திரு. சேனநாயக்கா பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சனுடன் இலங்கைக்குப் பொருளாதார உதவிபற்றி பேச்சுக்கள் நடத்தினர்.

பேச்சுக்களின் சாராம்சம் பற்றி உத்தியோகபூர்வமான தகவல் எதுவும் இல்லையாயினும், வியட்னும், ரொடீஷியா, ஜூலை மாதம் நடைபெறவிருக்கும் சாம்ராஜ்ய பிரதமர்கள் மகாநாடு ஆகிய விஷயங்கள் பற்றி இரு பிரதமர்களும் பேசியதாகக் கூறப்படுகிறது.

அதற்குமுன் திரு டட்லி சேனநாயக்கா சாம்ராஜ்ய உறவுமந்திரி திரு. பொட்டம்லியுடன் பேசினர். திரு. காமினி கொரியா, லண்டனிலுள்ள இலங்கை ஹைகமிஷனர் திரு. ஜி. பி. மலலசேகரா ஆகியோர் இப்பேச்சுவார்த்தையின் போது உடனிருந்தனர்.

இப்பேச்சுக்குப்பின் திரு. காமினி கொரியாவுடன் பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சுக்குச் சென்று, மந்திரி ஆர்தர் கிரீன்வுட்டுடன் பிரதமர் பேசினர். இலங்கையின் தேயிலை ஏற்றுமதிபற்றியும் பேச்சுக்கள் நடைபெற்றன.

தெவிநுவர, தொடங்கஸ்லந்தை

# தேர்தல் முடிவுகள் செல்லா

## அம்பாறைதேர்தல் ஆட்சேபனை தள்ளுபடி செய்யப்பட்டது

கொழும்பு, புதன்

தெவிநுவர தொடங்கஸலந்தை ஆகிய பாராளுமன்ற தொகுதிகளுக்கு நடைபெற்ற தேர்தல் முடிவுகள் செல்லுபடியாகாதவை என இன்று இரு நீதிபதிகள் தீர்ப்பளித்துள்ளனர். அம்பாறை தேர்தல் ஆட்சேபனைமனு தள்ளுபடிசெய்யப்பட்டது.

தெவிநுவர தொகுதியில் பாராளுமன்றத்துக்கு திரு. பி. எச். வில்லியம் டி சில்வா அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டது தகுதியற்ற

(6-ம் பக்கம் பார்க்க)

புதுவருட தினத்தை சிறப்பாகக் கொண்டாட

அரியதோர் சந்தர்ப்பம்!

இன்று தொடக்கம்

கூ. மொ. வி. (C. W. E.) ஸ்தாபனத்தாரின் புடவைகள் கூப்பனுடன் கட்டுப்பாட்டு விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

ஆ. அப்பையா அன் கோ

கூ. மொ. வி. அங்கீகாரம்பெற்ற புடவை வியாபாரிகள்

82, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்

போன்: 506

கிளை: 54, பெரியகடை யாழ்ப்பாணம்

போன்: 296 S. R. S. Estd: 1929

ஜவுளி மாளிகையில்

C. W. E. புடவைகள்

இன்று தொடக்கம்

கூ. மொ. வி. ஸ்தாபனத்தாரின் புடவைகள் 97- இலக்க கூப்பனுக்கு கட்டுப்பாட்டு விலைக்கே பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். ஆர். செல்லத்துரை

216, கே. கே. எஸ். றோட், — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

"மதுவினால் கிடைக்கும் வருவாயை நினைத்து நமது அரசாங்கங்களுக்கு ஏற்பட்டிருக்கும் போதை மதுவின் போதையை விடக்கொடிது. கடவுள் நமது அரசாங்கங்களை இந்தப் போதையிலிருந்து காக்கட்டும். —ஆசார்ய விநோபா


# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு பங்குனி மீ 25 வ. (7-4-66)


## உணவு அமைச்சரின் விஜயம்

நாட்டில் பஞ்சமும், பசியும் ஏற்படாமலும் நாட்டு மக்கள் உயிருடன் வாழவும் பொறுப்பாகவுள்ள உணவு வசாய அமைச்சர் வடபகுதிக்கு உத்தியோக ரீதியில் விஜயஞ்செய்து இங்கு உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான வழிவகைகளை ஆராய்ந்து சென்றிருக்கிருர். மந்திரிகள் வருவதும் வாக்குறுதி அளித்துத் திரும்புவதும் இப்பகுதி மக்கள் காலம்காலமாக அறிந்த உண்மை. சமூக ஒற்றுமையின் மூலமே நாட்டின் பொருளாதாரத்தைப் பெருக்க முடியுமென்பதையும் உணவுஉற்பத்தியை அதிகரிப்பதற்கு இந்நாட்டு மக்கள் அனைவரினதும் ஒத்துழைப்பும், உதவியும், முயற்சியும் தேவை என்பதையும் தேசிய அரசாங்கம் நன்கு உணர்ந்திருப்பதால் உணவு அமைச்சரின் இந்த விஜயம் நற்பயனை அளிக்குமென எதிர்பார்க்கலாம்.

வட பகுதியைப் பொறுத்தவரையில் இயற்கை வளம் மிகமிகக் குறைவு. எனினும் இப்பகுதி மக்களின் கடும் உழைப்பின் மூலம் உப உணவுப் பொருள்கள் இங்கு உற்பத்திசெய்யப் படுகின்றன. உருளைக் கிழங்கு, பம்பாய் வெங்காயம் போன்ற புதிய பயிர்ச்செய்கைகளிலும் கூட அவர்கள் வெற்றியீட்டியுள்ளனர். அவர்களுக்கு உதவியும், ஊக்கமும் அளித்தால் நிச்சயம் உபஉணவுப் பொருள்களுக்காக வெளிநாடு செல்லும் பெருந்தொகைப் பணத்தை மிச்சப்படுத்தமுடியும். இதை உணவு மந்திரியும் உணர்ந்துள்ளார்.

அரிசி, சீனி, மாவு முதலிய உணவுப்பொருள்கள் கொழும்பிலும் மற்றும் இடங்களிலும் விற்கும் விலையைவிட இப்பகுதி மக்கள் அதிக விலை கொடுத்தே வாங்க வேண்டியுள்ளது. இந்த நிலையை மாற்றுவதற்கு, உணவுக் கப்பல்களை இப்பகுதித் துறைமுகங்களுக்கு நிரந்தரமாக அனுப்பலாம். இதன் மூலம் இங்கு வேலையற்றிருப்போருக்கு வேலை வாய்ப்பும் கொழும்புத் துறைமுகத்தில் ஏற்படும் வீண் காலதாமதத்தை நீக்கவும் வழிபிறக்கும்.

உணவு அமைச்சர் இங்குள்ள விவசாயிகளின் நிலைமையையும் உணவு, உப உணவுப் பொருள்களின் உற்பத்தியை அதிகரிக்கக்கூடிய வாய்ப்பையும் நேரில் அறிந்து சென்றிருப்பதால், முன்னைய அரசாங்கங்கள், அரசியல் காரணங்களால் இப்பகுதியைப் புறக்கணித்தது போன்று இல்லாமல், இப்பகுதி விவசாயிகளுக்கு ஊக்கமும உதவியுமளிக்க முன்வருவாரென்று எதிர்பார்ப்போம்.

## வாழ்த்துகிறோம், பாராட்டுகிறோம்

இந்திய நீச்சல் வீரர் திரு. மிகிர்சென் இலங்கைக் கரையிலிருந்து புறப்பட்டு பாக்கு நீரிணையை வெற்றிகரமாக நீந்திக்கடந்து இந்தியக் கரையை அடைந்து, தமது நாட்டுக்குப் பெயரையும் புகழையும் சம்பாதித்துக் கொடுத்திருப்பதுடன் இலங்கை-இந்தியஉறவுவலுப் பெறவும் உதவி புரிந்துள்ளார். திரு. சென் நிகழ்த்திய சாதனையின் மூலம் இந்திய-இலங்கை இளைஞர்களுக்கும் மன உறுதியையும் உற்சாகத்தையும் அவர் அளித்துள்ளார். இலங்கை, இந்திய மக்களுடன் சேர்ந்து நாமும் அவருக்கு எமது வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

திரு. மிர்கி சென் 36 வயது இளைஞன். ஒரு பாரிஸ்டர். முன்னமே ஆங்கிலக்கால்வாயை நீந்திக்கடந்து புகழ் ஈட்டியவர். என்றாலும் ஆங்கிலக் கால்வாய்க்கும் பாக்கு நீரிணைக்கும் வித்தியாசம் அதிகமுண்டு. கொந்தளிப்பும் குமுறலும் நிறைந்தது பாக்குநீரிணை. எந்த நேரம் கடல் எப்படியெப் படிமாறும்என்று சொல்ல முடியாது. மனிதரை உயிருடன் விழுங்கும் பெரிய சுறாமீன்களும் இக்கடலில் உள்ளன. இவைகளையெல்லாம் துச்சமாக மதித்து எடுத்தகாரியத்தைத் துணிச்சலுடனும் உறுதியுடனும் வெற்றிகரமாகச் சாதித்திருக்கிருர் திரு. சென். இலங்கையைச் சேர்ந்த திரு. நவரத்தினசாமி

பாக்குநீரிணையை முதல் தடவையாக வெற்றிகரமாக நீந்திக்கடந்து இலங்கையின் சரித்திரத்தில் இடம் பெற்ருர். இதன் பின் இலங்கை இளைஞர் திரு. எஸ். வி. ஆனந்தனும் இம்முயற்சியை மேற்கொண்டார். ஆனல் சரியான ஏற்பாடுகளிருக்கவில்லை. அரசாங்கத்தின் உதவியும் ஒத்துழைப்பும் கிடைக்கவுமில்லை. திரு. சென் 25 மணி 44 நிமிடம் நீந்தியபின் கரைசேர்ந்திருக்கிருர். இதற்குமுன் நீந்தியவர்களும் கிட்டத்தட்ட இதேநேரம் எடுத்திருக்கின்றனர். திரு. சென் எடுத்த முயற்சிக்கு இந்திய அரசாங்கம் இந்தியவாஞெலி ஆகியவை அளித்த உதவியும் ஒத்துழைப்பும் இலங்கை அரசாங்கத்துக்கு இனியாவது வழிகாட்டக் கூடியதாக இருக்கவேண்டும்.

## பிரிட்டிஷ் மந்திரிசபை

லண்டன், ஏப்ரல் 6

பிரிட்டிஷ் பிரதமமந்திரி அறிவித்திருக்கும் புதிய மந்திரிசபையில் சில்லறை மாற்றங்கள் சில இடம்பெற்றிருக்கின்றன.

உயர் அந்தஸ்து மந்திரிகளின் நிலையில் மாற்றமில்லை.

திரு. பிரௌன் துணைப்பிரதமராகவும், திரு. கலகன் நிதிமந்திரியாகவும், திரு. ஸ்டுவர்ட் வெளிநாட்டு மந்திரியாகவும், திரு. பாட்டம்லி காமன்வெல்த் மந்திரியாகவும் அப்படியே இருக்கிருர்கள்.

ஸ்ரீமதி வைட் வெளிநாட்டு ராஜாங்க மந்திரி.

திரு. கோர்டன்வாக்கர் பெயர் இடம்பெறவில்லை. [illegible] கிருர்கள்.

# தமிழகம் கண்ட தலைசிறந்த அருட் புலவர்

- வித்துவான், சைவப்புலவர் க. கணபதிப்பிள்ளை பி. ஏ. -

**பத்தி இயக்கத்திற்கு வித்திட்ட தமிழகம் கண்ட தலைசிறந்த அருட்புலவர் காரைக்கால் அம்மையாரின் நினைவுதினம் இன்ருகும். இதையொட்டி இக் கட்டுரை வெளிவருகின்றது.**

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சங்ககாலத்திலே தமிழர் வாழ்வு புகழ் பூத்திருந்தது. அதன்பின்னர் இருண்ட காலம் களப்பிரர் வருகையால் தமிழகத்தில் ஏற்பட்டது. அவ்விருளைக் கிழித்துப் பேரொளி ஒன்று அக்கால முடிவிலே தோன்றியது. அதன் பெறுபேருகத் தமிழகத்திலே பத்திநெறி வளர்ந்தது. தமிழர் வாழ்வும் கலையும் கலாசாரமும் வளம்பெற்றன. ஆழ்வார்களும் நாயன்மார்களும் ஞானத்தமிழை நாடு எங்கும் பரப்பினர். தமிழ் மக்களின் பொற்காலம் உதயமாயிற்று பல்லவர்க்குப் பின்னர் சோழர் எட்டுத்திக்கும் தமிழ்ப்பண்பைப் பரப்பினர்.

இருளிலே கிடந்த தமிழகத்தை ஒளிபெறச் செய்வதில் பெரும்பங்குகொண்டவர் காரைக்கால்அம்மையாராவர். இவர் கற்புக்கடம் பூண்ட தெய்வநெறியினர்; இளமை முதல் இறைவன் மாட்டு ஆரா இன்ப அன்பு பூண்டவர்; கல்வியின் கரை கண்டவர்; கணவனுலே தெய்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்; பேய் வடிவம் வேண்டுமென விரும்பிப் பெற்றவர்; திருவாலங்காட்டிலே இறைவனின் திருநடனக் காட்சியைக் கண்டு களித்து இரட்டை மணிமாலை மூத்ததிருப்பதிகம், அற்புதத்திருவந்தாதி முதலாம் அருள்நூல்களை அருளிச்செய்தவர்.

அப்பர் சம்பந்தர் காலத்திற்கு முன்னர் வாழ்ந்து இயல் இசை செறிந்த கருப் பாடல்கள் மூலம் தமிழகத்தைத் தட்டியெழுப்பி மறுமலர்ச்சிப் பாதையில் இட்டுச்சென்ற பெருமை அம்மையாருக்கே உரியதாகும். அம்மையாரே முதன்முதல் பத்தி அனுபவத்தை வெண்பா யாப்பில் பாடி எமக்கு ஈந்தவர். வெண்பா யாப்பில் தமது தெய்வ அனுபவத்தை எடுத்துரைப்பது இலகுவல்லவெனக் கண்டு பின் கட்டளைக் கலித்துறையெனும் புதிய யாப்பு வகையை ஏற்படுத்தியவர். தேவாரப்பதிக அமைப்பிற்கும் முத்திரைக்கவி அமைப்பிற்கும் வழிகாட்டி இவரே. ஆகவே காரைக்கால் அம்மையார் தம் வாழ்வாலும் வாக்காலும் தமிழ் இலக்கியத்தையும் சமூகத்தையும் மறுமலர்ச்சி அடையச் செய்த அருட்பெரும் புலவர் வரிசையில் வைக்கப்படவேண்டியவர். அறுபத்து மூன்று நாயன்மார்களுள் காலத்தாலும் அருட்செயலாலும் முதலிடம்பெற்றவர். சமயகுரவராக கொள்ளப்படவேண்டியவர்.

இறைவனுடனே நட்புரிமையுடனும் நகைச்சுவையுடனும் பேசுவதுபோன்ற திருப்பாடல்கள் பலவற்றை அம்மையார் அருளியுள்ளார். இத்தகைய இலக்கிய ஆக்கத்திற்கும் அம்மையாரே வழிகாட்டியாவர். உதாரணத்திற்கு ஒன்று காட்டுவாம்.

"மிடற்றில விடம் உடையீர்! உம்மிடற்றை நக்கி மிடற்றில் விடங்கொண்டவாரே? - மிடற்றகத்து மைத்தாம் இருள்போலும் வண்ணம் கரிதாலோ? பைத்தாடு நும்மார்பிற் பாம்பு"

"திருநீலகண்டம் உடைய இறைவனே, உமது மார்பில் படமவிரித்து ஆடும் பாம்பு உமது மிடற்றை நக்கிக் கருமையைப் பெற்றதோ? அன்றி அதன் நிறந்தான் உமது மிடற்றினது மை போன்ற இருளைப்போலக் கரியதா?" என வினவுகின்ருர்.

அம்மையார் அருளிய நூற்றிப்பதின்மூன்று திருப்பாடல்களும் இத்தகைய நலம் பலவுடையனவாகும்.

அரிய சைவசித்தாந்த தத்துவக் கருத்துக்கள் அம்மையார் பாடலிலே உள, "அவனே இருசுடர், தீ ஆகாசம்; அறிவால் அறிகின்ருன்; ஏகமாய் நின்ருன்; தன்னை அறியாத தன்மையன்; எக்கோலத் தெவ்வுருவில் எத்தவங்கள் செய்வார்க்கும் அக்கோலத் தவ்வுருவேயாம்; இறைவனே எவ்வுயிரும் தோற்றுவிப்பான்" என்பன அவற்றுட் சில.

சுருங்கக்கூறின் அம்மையார்க்குதமிழ்கூறும் நல்லுலகம் மிகவும்கடமைப்பட்டுள்ளது. சைவசமயத்தவர்கள் பத்திநெறியை மேற்கொள்வதற்கு மூலகாரணர் இவரே. இவரின் கற்புநெறியும் அற்புத ஆற்றலும் தமிழறிவும் இறையுணர்வும் தமிழுலகில் மிகப் பெரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்த உதவின. இவர் போன்ற அருளாளர்களை உலகமே போற்றக் கடமைப்பட்டுள்ளது.

"ஆதியோடு அந்தம் இல்
லான் அருள்நடம்
ஆடும்போது
கீதமுன் பாடும் அம்மை
கிளர்ஒளி மலர்த்தாள்
போற்றி"

என்பது சேக்கிழார் பெருமான் திருவாக்காகும்.

# கோள் என் செயும்?

—வி. என். பி.—

ஒரு புதிய வருடம் பிறக்கும்போது அந்தவருடத்தின் மழைப்பலன், கந்தாயபலன் முதலியவற்றையும் கோள்களின் மாற்றங்களையும் அவற்ருல் உண்டாகக் கூடிய நன்மை, தீமை முதலியவற்றையும் அறிந்துகொள்ள எவரும் ஆசைப்படுவார்கள். இவர்களுக்கு வழிகாட்டிகளாக அமைவன யாழ்ப்பாணம் மட்டுவிலில் வெளியாகும் திருக்கணித பஞ்சாங்கமும் கொக்குவிலில்வெளியாகும் வாக்கிய பஞ்சாங்கமுமே வாக்கிய பஞ்சாங்கம் முற்காலத்தில்வாழ்ந்த முனிபுங்கவர்கள் கணித்த வாக்கியங்களின் முறைகளையே பின்பற்றுகிறதென்றும், திருக்கணித பஞ்சாங்கம் நவீன வானசாஸ்திர முறைப்படி கணிக்கப்படுகிறதென்றும், கூறுகிருர்கள். இதன் விளைவாக இருபஞ்சாங்கங்களும் ஒன்றுக்கொன்று வித்தியாசப்படுவது இயற்கையே.

(6-ம் பக்கம் பார்க்க)

# ஐயாறன் எழுதுகிறது

சென்றவருடம் சென்றிருந்தபோது அண்ணுமலையிலே ஈழத்து மாணவ மாணவிகள் சுமார் முப்பது பேருக்கு மேலிருந்தனர். ஆனல் இப்போது அந்தஎண்ணிக்கை பாதிக்கும் குறைந்துவிட்டதாக அறிந்ததும் மிகவருத்தமாக இருந்தது. 'எக்ஸ்சேஞ்ச்' இல்லாமல் நம் மாணவர்கள் அங்கு என்ன செய்வர்?

நம் மாணவர்களுக்காக அண்ணுமலை எவ்வளவோ சலுகை காட்டுவதாக அறிந்தேன். அதிலும் தமிழ்ப் பேராசிரியர் இராமநாதன் செட்டியார் அவர்கள் நம்மவர்களுக்குச் செய்துவரும் உதவியைப் பல மாணவர்கள்மூலமும் அறிய, அன்னருக்கு எப்படி நன்றி செலுத்துவதென்பதே தெரியவில்லை. சிறுவயதிலே அவர்கொழும்பில் இருந்தாராம். அவரது குடும்பத்துக்கு இங்கு அதிக சொத்துபத்துக்கள் இருந்தன. அவர் தமிழ் படிக்க வென்றே, கருணலய பாண்டியனரவர்களை, அவரது தந்தையார் இங்கு வரவழைத்து ஆதரித்தாராம். அவருக்காக வந்த பாண்டியனர் இங்கேயே தங்கி, செய்துவரும் பணிகள் விளக்கத் தேவையில்லை. அப்போது சிலகாலம் இங்கிருந்த காரணத்தால், செட்டியார் அவர்களுக்கு ஈழத்தின்பால் தனி அன்பு. அதன் பயனக அங்கு நம் மாணவர்களுக்கு பெருந்துணையாக இருக்கின்ருர். அவரும் அவரது துணைவியாரும் தமக்குத் தந்தையும் தாயும் போலிருந்ததாக, அங்கு படித்த ஓர் ஈழத்து மாணவி நன்றியுடன் தெரிவித்தார். இன்னும் இந்த மாதிரி எவ்வளவு பேர்களோ! நம் ஈழத்து மாணவ மாணவிகள்பால் இவ்வளவு அன்புகாட்டி ஆதரிக்கும் பேராசிரியரும் அவரது குடும்பத்தாரும் நீடூழி வாழ்க!

அவர் வீட்டிலே அன்புடன் அளித்த ஒரு விருந்தை அதுவும் அந்த ருசியான 'பால பணியாரத்'தை என்னல் மறக்கவே முடியாது.

ஃ ஃ ஃ

கடல்கடந்து வசிக்கும் இந்தியர் ஒவ்வொருவரும் இந்தியாவின் கௌரமிக்க தூதராவர் என்று ஒரு சமயம் நேருஜி இங்கு வந்தபோது கூறினர். அண்ணுமலையிலே நம் மாணவர் அவ்விதமே ஈழத்தின் பெயரையும் புகழையும் காத்து வருவதைக் காண மிக மகிழ்ச்சியாகவும் பெருமையாகவுமுள்ளது. அச்சர்வகலாசாலையில் 5000-க்கு மேற்பட்ட மாணவமாணவிகள் படிக்கின்றனர். அந்த மாணவர் சங்கத்தின் காரியதர்சியாக நெடுந்தீவைச் சேர்ந்த செபஸ்தியான் பிள்ளை ஏகமனதாகத்தெரிவு செய்யப்பட்டுள்ளது ஈழத்துக்கே பெருமையளிப்பதாகும்.

மாணவர்சங்க ஆண்டு விழாக் கூட்டம் நடந்தது. உபதலைவாரன ஒரு பேராசிரியர் பேசுகையில், மாணவர்கள் அவரைப் பேசவிடாமல் சற்றே கூச்சல் போட்டனர். நிலைமை மிக சங்கடமாகவே, காரியதரிசி செபஸ்தியான்பிள்ளை மேடையிலே முன்வந்து "நீங்கள் என்னை ஏகமனதாக உங்கள் காரியதரிசியாகத் தெரிவு செய்தீர்கள். இப்பொழுது உங்கள் நடத்தை செபஸ்தியான்பிள்ளையை அவமதிக்கவில்லை. உங்களை நீங்களே அவமதித்துக் கொள்கிறீர்

6-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மற்றோர் எண்ணெய்க்கப்பல்

# ரொடீஷியா செல்கிறது

## தலையிட முடியாது என போர்த்துக்கல் கைவிரிப்பு

### ஐ. நா. வில் கவலை; பிரிட்டிஷ் மந்திரி லிஸ்பன் விரைகிறார்

லிஸ்பன், ஏப்ரல் 6

ரொடீஷியாவுக்கு எண்ணெய் ஏற்றிக் கொண்டு தற்போது கிழக்காபிரிக்கா துறை முகத்துக்குச் சென்றிருக்குச் கிரேக்க கப்பல் விஷயத்தில் தன்ருல் தலையீடு செய்ய முடியாது என போர்த்துக்கல் மீண்டும் பிரிட்டனுக்கு அறிவித்துவிட்டது.

அதேசமயம் மற்றோர் கிரேக்க எண்ணெய்க்கப்பல் ரொடீஷியாவுக்குச் செல்லும் வழியில் பகாரா துறைமுகம் சென்று கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

போர்த்துக்கல் அரசாங்கம் இவ்விஷயம்பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தும் பொருட்டு பிரிட்டிஷ் மந்திரி ஒருவர் லிஸ்பனுக்குப் புறப்பட்டிருக்கிறார்.

லிஸ்பனில் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில், இவ்விஷயத்தில் மூன்ருவது கட்சியின் தலையீடு எதற்கும் போர்த்துக்கல் இணங்காது எனக் கூறப்பட்டுள்ளது.

போர்த்துக்கலின் போக்கிஞல் கடும் விளைவுகள் ஏற்படும் என பிரிட்டன் எச்சரித்திருக்கிறது.

பகரா துறைமுகத்திலிருந்து ரொடீஷியாவுக்கு இணைக்கப்பட்டுள்ள எண்ணெ சப்ளை குழாய் கம்பெனியின் பிரிட்டிஷ் டைரக்டர்கள் இன்று நிலைமைபற்றி ஆராய்ந்தனர்.

இதற்கிடையில் குறிப்பிட்ட கப்பல்களைப்பிடித்து, ஸ்தலத்திலேயே கடும் தண்டனை அளிக்க கிரேக்க அரசாங்கம் அனுமதி வழங்கியிருக்கிறது.

ஐ. நா. விலுள்ளபிரிட்டிஷ் பிரதிநிதி இதுபற்றி ஆலோசனைக்காக பிரிட்டனுக்கு அழைக்கப்பட்டிருக்கிருர்.

ரொடீஷியாவுக்கு எண்ணெய்க்கப்பல்கள் செல்லுப் விஷயம் ஐ. நா. வில் பெரும் கவலையை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகிறது. அங்குள்ள ஆசிய-ஆபிரிக்க நாடுகள் இவ்விஷயம்பற்றி பாதுகாப்புசபைக்கு முறையீடு செய்திருக்கின்றன.

## சீனுவுக்கு கனடா கோதுமை

ஒட்டாவா, ஏப். 6

55 கோடி டாலர் பெறுமதியான 28 கோடி புசல் கோதுமையை. அடுத்த 3 ஆண்டுகளில் கனடா சீனுவுக்கு விற்கும்.

---

## பள்ளிகள் அரசாங்க மயம்

ரங்கூன், ஏப். 6

பர்மாவில் 685 தனியார் பாடசாலைகள் அரசாங்க உடைமையாக்கப்பட்டன.

---

## லெபஞன் பிரதமர்

பேருட், ஏப். 6

லெபஞனில் புதிய அரசாங்கம்அமைக்குமாறு திரு. யாபி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிருர். திரு. யாபி இதற்குமுன் 5 தடவைகள் பிரதமராக இருந்திருக்கிருர்.

---

## குடும்பக் கட்டுப்பாடு

புதுடில்லி, ஏப். 6

குடும்பக் கட்டுப்பாட்டில் சிறந்த முறையைக் கைக்கொண்ட பஞ்சாபுக்கு 1965/66-ம் ஆண்டுக்கான முதல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

---

## சீனப் பள்ளிகள் மூடப்பட்டன

ஜாகர்த்தா, ஏப். 6

ஜாகர்த்தாவிலுள்ள எல்லா சீனப் பாடசாலைகளையும் மூடுமாறு அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. அவைகளுக்கு நிதியுதவியளிக்கும் ஸ்தாபனங்கள் கலைக்கப்பட்டிருக்கின்றன.

---

## இருதயத்தின் ஆழம் கண்டனர்

டோக்கியோ, ஏப். 6

ஜப்பானிய விஞ்ஞானிகள் மனித இருதயத்தின் உட்பகுதியைப் படம் எடுத்திருக்கிருர்கள். இந்தமுறை வைத்திய உலகுக்குப்பெரும் நன்மையை ஏற்படுத்தும் எனக் கூறப்படுகிறது.

---

## 19 புதிய வான் வீரர்கள்

வாஷிங்டன், ஏப்ரல் 6

19 புதிய வானவெளிவீரர்களை அமெரிக்கா அறிவித்திருக்கிறது. இவர்களுடன் மொத்தம் 50 அமெரிக்க வானவெளி வீரர்கள் இருப்பார்கள்.

புதிதாக அறிவிக்கப்பட்ட 19 பேரில் நால்வர் சிவிலியன்கள் மிகுதிப்பேர் ராணுவத்தினர். மூன்ருண்டுகாலம் இவர்கள் [illegible]

# தென்வியட்னுமில் பொதுத்தேர்தல்

### விரைவில் நடத்த அரசாங்கம் முயற்சி

சைகோன், ஏப்ரல் 6

தென்வியட்னுமில் டானுங்கிலுள்ள அரசாங்கத்துருப்புகளுக்கும் கிளர்ச்சித்துருப்புகளுக்குமிடையே தற்காலிக உடன்பாடு ஒன்று ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

பிரதமர்கை அங்கு ஸ்தல தளபதிகளுடன் பேச்சுநடத்திய பின் இந்த முடிவு ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது. பிரதமர் அங்கு செல்ல முன் பலமான அரசாங்கத்துக்குப் புகார்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

டானுங் நகரம் கம்யூனிஸ்டுகளின் கட்டுப்பாட்டில் இருக்கவில்லை என ஸ்தல தளபதிகளுடன் தாம் நடத்தியபேச்சிலிருந்துமுடிவுக்கு வந்ததாக கை கூறிஞர்.

இதற்கிடையில் பொதுத் தேர்தலுக்கு விரைவுபடுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன

மாணவர்களும் பௌத்த தலைவர்களும் தேர்தல் நடத்துமாறு கிளர்ச்சி செய்வதை அடுத்து இம்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

தென்வியட்னுமின் உள்நாட்டு விஷயத்தில் அமெரிக்கா நடுநிலைமைக்கொள்கையைவகிக்குமெனவாஷிங்டனில் ராஜாங்க இலாகா அறிவித்தது. டானுங், ஹூவே ஆகிய இடங்களில் உள்ள தென்வியட்னும் ராணுத்திலிருந்து அமெரிக்க ஆலோசகர்கள வாபஸ் பெறப்படுவதாயும் அறிவிக்கப்பட்டது.

நேற்று சின எல்லையிலுள்ள வடவியட்னும் இலக்குகளை அமெரிக்க வெடிகுண்டு விமானங்கள் தாக்கின.

பிரதமருக்கும் கிளர்ச்சி ராணுவத்துக்குமிடையே உடன்பாடு ஏற்பட்டதாகக் கூறப்பட்ட போதிலும், சைகோன் உட்படப் பல தென்வியட்னுமிய நகரங்களில் நேற்றும் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

ஹூவே, டானுங் ஆகிய இடங்களிலுள்ள அமெரிக்கர்கள் வாபஸ் பெறப்படவிருக்கிருர்கள்.

வடவியட்னுமுக்கு தொடர்ந்து ரஷ்யா உதவப்போவதாக பிரதமர் கோஸிஜின் அறிவித்திருக்கிருர்.

## விந்தையான டெலிவிஷன் கோபுரத்தின் 10-வது ஆண்டு

ஸ்டட்கார்ட், ஏப். 6

உலகின் பல்வேறு இடங்களில்உள்ள 'டெலிவிஷன்' கோபுரங்களுக்கு முன்மாதிரியாகத் திகழும் ஸ்டட்கார்ட் 'டெலிவிஷன்' கோபுரம், தனது பத்தாவது ஆண்டு நிறைவுவிழாவைக் கொண்டாடுகிறது. இந்தக் கோபுரம் 217 மீட்டர் உயரமுள்ளது. கோபுரத்தின்மீது 78 லட்சம் மக்கள் ஏறி, ஸ்டட்கார்ட் நகரின் அழகைப் பார்த்து ரசித்திருக்கிருர்கள். கோபுரத்தின் உச்சியில்அமைந்துள்ளசிற்றுண்டி விடுதியில் அமர்ந்து ஆனந்தமாகச் சிற்றுண்டி அருந்தியிருக்கிருர்கள்.

'ஸ்டட்கார்ட்' நகரின் டெலிவிஷன் கோபுரத்தைப் பின்பற்றி அதேமாதிரியாக ஜோகன்னஸ்பர்க் (தென்னுபிரிக்கா)பெல்கிரேட்(யூகோஸ்லேவியா), வியன்ஞ(ஆஸ்திரியா) நயாகரா நீர்வீழ்ச்சி (அமெரிக்கா) ஆகிய இடங்களில் டெலிவிஷன் கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பின்லாந்து நாட்டில் இக்கோபுரத்தின் 'மறுபதிப்பு' ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இதைப்பின்பற்றி ஜப்பானிலும் எஃகு கோபுரம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. மாஸ்கோவில் இதன் அடிப்படையில் கட்டப்படும் டெலிவிஷன்கோபுரம், ஏற்கெனவே 230 மீட்டர் உயரம் எட்டிவிட்டது. 520 மீட்டர் உயரம்வரையிலும் இக்கோபுரம் கட்டப்படும்.

---

## இன்னும் ஒரு நிலையில் இந்திய துருப்புகள்

ராவல்பிண்டி, ஏப். 6

சியால்கோட் பகுதியில் 3 இடங்களில் வைக்கப்பட்டிருந்த இந்தியத்துருப்புகள் இரு இடங்களிலிருந்துமட்டும் வாபஸ் பெறப்பட்டதென்றும், மற்ருேரிடத்தில் இன்னும் இருப்பதாயும் பாகிஸ்தான் புகார் கூறியுள்ளது. 3-வது நிலையிலிருந்து வாபஸ்பெறுவது பற்றிய தீர்வு சாத்தியமாக இருக்கும் எனவும் அது கருதுகிறது.

---

## செனட கமிட்டி அங்கீகாரம்

வாஷிங்டன், ஏப்ரல் 6

இந்தியாவுக்கு 35 லட்சம் டன் மேலதிக உணவு உதவி அளிக்கும் ஜனதிபதி ஜோன்ஸனின் கோரிக்கையை செனட் விவசாயக் கமிட்டி அங்கீகரித்திருக்கிறது இன்று முழு செனட்டின் அங்கீகாரம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## மிகிர்சென் பாக்குநீரிணையை நீந்தி முடித்தார்!

### 26 மணி நேரம் பிடித்தது

தனுஷ்கோடி, ஏப்ரல் 6

இந்திய நீச்சல்வீரர் மிகிர் சென் இன்றுகாலை 7-24க்கு தனுஷ்கோடியை வெற்றிகரமாக நீந்திக் கடந்தார்.

நேற்றுக்காலை 5-40க்கு மன்ஞரிலிருந்து புறப்பட்டு 25 மணி 42 நிமிடம்கடலில் கழித்தபின் இந்தியக் கரையை அடைந்தார்.

பாக்கு ஜலசந்தியை ஏற்கெனவே இலங்கை நீச்சல் வீரர்களான நவரத்தினசாமியும், ஆனந்தனும் நீந்திக் கடந்தனரென்பது குறிப்பிடத்தக்கது. திரு. சென் அதைக் கடக்கும் மூன்ருவது நபராகும்.

திரு. சென் நல்ல தேகாரோக்கியத்துடன் இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

நேற்றிரவு பௌர்ணமி சமயத்தில் கடல் கொந்தளிப்பாக இருந்ததென்றும், ஐந்தடி அலைகள் இருந்ததென்றும், 8 மைல்தூரம் கடலில் இழுப்பு இருந்ததென்றும் கூறப்பட்டது

திரு. சென்னுக்கு நீந்தும் வழியில் தேன், குளுகோஸ் ஆகாரமாகக் கொடுக்கப்பட்டன. ஐஸ் தண்ணீர், இளநீர், எலுமிச்சம்பழச்சாறு ஆகியவற்றையும் நீந்தும் போது அருந்திஞர்.

பாக்குஜலசந்தியை நீந்திக் கடந்த மிகிர் சென்னுக்கு 36 வயது. ஒரு பாரிஸ்டர்.

---

## கம்பர் ஞாபகார்த்த முத்திரை

சென்னை, ஏப். 6

கவிச்சக்கரவர்த்தி கம்பரின் ஞாபகார்த்தமாக 15 பைசா பெறுமதியான முத்திரையொன்றை தபால் இலாகா இன்று வெளியிட்டிருக்கின்றது.

2-வது கம்பர் ஞாபகார்த்த மகாநாடு இன்று முடிவடைந்தது. கம்பர் வாழ்ந்த இடத்தை உல்லாசப்பிரயாணிகள் சென்று பார்வையிடுவதற்கான ஒரு வரலாற்றுப் பூமியாக சீர்திருத்த வேண்டுமென்று இம்மாநாட்டில் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

---

## மதுரை மீனுட்சி அம்மன் கோவில்

சென்னை, ஏப். 6

மதுரை மீனுட்சி அம்மன் கோவிலில் நவீன ஒலி, ஒளி அமைப்புகளை ஏற்படுத்த தமிழ்நாடு அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. இதுவிஷயமாகதமிழ் நாடு இங்குஅலை நிலைய பாதுகாப்புக் கமிஷனரின் கருத்து கோரப்பட்டிருக்கின்றது.

---

## வெள்ளத்துக்கு 18 பேர் பலி

ஹாங்காங், ஏப். 6

ஹாங்காங்கில் வெள்ளம் காரணமாக 18 பே[illegible]டனர்.

## மீஸோ பலம் குறையவில்லை

ஷில்லாங், ஏப். 6

மீஸோ தேசிய முன்னணியின் முக்கிய பிரிவு இன்னும் குலையவில்லையென அஸ்ஸாம் முதல்வர் சாலிஹா அறிவித்தார். மீஸோக்கள் பல சிவில் அதிகாரிகளைக் கடத்திச் சென்றுவிட்டார்களென்றும் அவர் கூறிஞர்.

## சாஸ்திரி சமாதி

புதுடில்லி, ஏப்ரல் 6

திரு. லால்பகதூர் சாஸ்திரியின் சமாதிக்கு விஜயகாட் எனப் பெயரிடுவதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது. சமாதியின் வடிவமைப்பு எடுப்பாகவும், எளிமையாகவும் இருக்கும் சாஸ்திரியின் கோஷமான ஜெய்ஜவான், ஜெய்கிஸான் என்ற கோஷம் அதில் பொறிக்கப்படும்.

---

## தென்கிழக்கு மகாநாடு

டோக்கியோ, ஏப்ரல் 6

தென்கிழக்காசிய அபிவிருத்தி பற்றிய மந்திரிகள் மகாநாடு ஒன்றை ஜப்பான் நடத்தவிருக்கிறது. இதில் 9 நாடுகள் கலந்துகொள்ளும். பொருளாதார அபிவிருத்திபற்றி மகாநாடு ஆராயும். கம்போடியா மகாநாட்டுக்குப்பார்வையாளரை அனுப்பும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்திலும் உருளைக்கிழங்குச் செய்கை

## உணவுமந்திரி தகவல்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம், வவுனியா, அநுராதபுரம் ஆகிய மூன்று இடங்களையும் உருளைக் கிழங்குப் பயிர்ச்செய்கைக்கு அரசாங்கம்தெரிவுசெய்துள்ளதென்று உணவு மந்திரி திரு எம் டி. பண்டா கோண்டாவில் வடமாகாண விளைபொருள் உற்பத்திச் சங்கத்தினரால் அளிக்கப்பட்ட வரவேற்பில் பேசுகையில் குறிப்பிட்டார்.

வருடமொன்றுக்கு 62000 தொன் உருளைக்கிழங்கை பிறநாட்டிலிருந்து அரசாங்கம் இறக்குமதி செய்கிறதென்றும், இதற்காக 320 லட்சம் ரூபாவை செலவு செய்கிறதென்றும் தெரிவித்த உணவு மந்திரி இப்படியான செலவைக் குறைப்பதற்கான ஆலோசனையைக் கூறினார்.

8,000 ஏக்கரில் மேல் குறிப்பிட்ட மூன்று இடங்களிலும் உருளைக்கிழங்கு உற்பத்தியை மேற்கொண்டால் நம்நாட்டுக்குத்தேவையான அவ்வளவு உருளைக்கிழங்கை உற்பத்தி செய்துகொள்ளலாம்.

உருளைக்கிழங்கு உற்பத்திப்போட்டியில்பரிசு பெற்ற ஐவருக்கு மந்திரி பரிசளித்தார். (ந. நி.)

## அபின் பற்றிய சட்டத்தில் திருத்தம்

கொழும்பு, புதன்

அபின்போன்ற போதை தரும் மருந்துவகைகள் சம்பந்தமாக சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு சுகாதார மந்திரி எம். டி. எச். ஜயவர்த்தன உத்தேசித்திருக்கிறார்.

## நினைவு தினம்

திருக்கோணமலை, புதன்

மூதூர் முதலாவது பாராளுமன்றப் பிரதிநிதியாக இருந்து காலஞ்சென்ற திரு. த. ஏகாம்பரத்தினது நினைவு தினம் சென்ற சனிக்கிழமை திருமலை இந்துக் கல்லூரி மண்டபத்தில் திரு. பா. வி. ஜயநாதன் தலைமையில் கொண்டாடப்பட்டது.

நகரசபைத் தலைவர் டாக்டர் சி. சிவானந்தன், திரு. வி. ஆர். நவரத்தினராசா, திரு. இ. சண்முகராசா உட்படப்பலர் பேசினர்.

## தாக்கிப்படுகாயம் விளைவித்ததாக வழக்கு தீர்ப்பு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், புதன்

ராமநாதபுரத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி பசுபதி என்பவருக்கு படுகாயம் விளைவித்தாகக் குற்றஞ்சாட்டி வட்டக்கச்சியைச்சேர்ந்த கணபதிப்பிள்ளை சண்முகம் என்பவர் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. ரொபர்ட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. திரு. பசுபதி சாட்சியமளிக்கையில் வட்டக்கச்சியிலிருந்து தாம் திரும்பிக்கொண்டிருந்தபோது எதிரி தம்மை வழிமறித்துத்தடியால் தலையில தாக்கியதாகவும் இடது கையை முறித்துவிட்டதாகவும் கூறினார்.

எதிரியின் கைவிரல் அடையாளத்தை எடுக்க உத்தரவிட்ட நீதிபதி தீர்ப்பளிப்பதை இம்மாதம் 18-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

கிளிநொச்சிப் பொலிஸாரின் அனுசரணையுடன் புறக்டர் அந்தோனி ஆஜரானார். எதிரியின் சார்பில் வழக்கறிஞர் திரு. எஸ். நவரட்ணம் ஆஜரானார். ந. நி.

## ஆலயப் பிரவேசம்

யாழ்ப்பாணம், வியாழன்

உரும்பராய் மேற்குக் கிராம முன்னேற்றச் சங்க இயக்கத்தின் ஆதரவில் உரும்பிராய் சிதம்பரசுப்பிரமணியகோவில் உரும்பராய் பறுவத பத்தினி அம்மன் கோவில் ஆகியவற்றில் ஹரிஜனமக்கள் ஆலயப்பிரவேசம் செய்தனர் உரும்பராய் மக்கள் மனப் பூர்வமாக இதனை ஆதரித்தனர்.

## எம். பி. நடிப்பார்

வல்வெட்டித்துறை, புதன்

எதிர்வரும் புதுவருடதினத்தன்று இன்பருட்டி கடற்கரை மைதானத்தில் நடைபெறவிருக்கும் 'லட்சியத்தின் பாதையிலே' என்னும் சமூக நாடகத்தில், பருத்தித்துறை எம் பி. திரு கே. துரைரத்தினம், நியாயதுரந்தரர் திரு. கே. ஜெயக்கொடி ஆகிய இருவரும் நாடகத்தில் இரு பாத்திரங்களை ஏற்று நடிக்கவிருக்கின்றனர்.


உறுதியானதும்
நீடித்து உழைப்பதும்
தன்னிகரற்றதுமான

"வைத்திலிங்கம்ஸ்"

இரும்பு - பித்தளை மர ஸ்குறூறு
ஆணிகளை
நீங்கள் வாங்குவதினால்
ஒரு சிறந்த பொருளை வாங்குவதோடு
உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள்
என்பதை மறவாதீர்கள்.

தயாரிப்பாளர்கள்:-
என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்
இரும்பு வியாபாரிகள்
450, பழையசோனக தெரு, கொழும்பு-12
தொலைபேசி: 7143 — 2029

கிளை: 138, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530


## பல்கலைக்கழக மாணவர்கள்

கொழும்பு, புதன்

பல்கலைக்கழகங்களில்கலை, விஞ்ஞானம் ஆகிய இரு பாடங்களும் கட்டாயபாடமாக்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

பல்கலைக்கழகங்களில் அனுமதிபெறும் மாணவர்கள், கலைப்பிரிவைச் சேர்ந்தவர்களாகவிருந்தால் அவர்கள் விஞ்ஞான பாடமொன்றையும் விஞ்ஞான பிரிவைச் சேர்தவர்களாகவிருந்தால் கலைப்பாடமொன்றையும் கட்டாயம் பயிலவேண்டியிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## கிராமசேவகருக்கு கிராமப் படங்கள்

கொழும்பு, புதன்

சகல கிராம சேவகர்களுக்கும், கிராமங்களின் படங்கள் விநியோகிக்கப்படவிருக்கின்றன.

இந்தப்படங்களில் கிராமங்களின் சகல விபரங்களும் அடங்கியிருக்கும். ஒரு கிராமத்தின் விபரங்களை ஒருவர் அறியவிரும்பினால் கிராம சேவகர் மூலம் இதனைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## காரை பொலிஸ் கைப்பற்றியது

### வலைகள் காணாமற் போனதன் எதிரொலி

யாழ்ப்பாணம், புதன்

சுமார் 1500 ரூபாய் பெறுமதியான மீன்பிடி வலைகள் காணாமற்போனதைத் தொடர்ந்து யாழ்ப்பாண பொலிசில் கரையூரைச் சேர்ந்த சிலர் புகார் செய்திருந்தனர்.

இந்தப் புகாரையொட்டி யாழ்ப்பாண பொலிஸ் இன்ஸ்பெக்டர் சவுந்தரநாயகமும் சார்ஜண்ட் கனகரத்தினமும் புலன்விசாரணையில் ஈடுபட்டதன் பேரில் காணாமற்போன வலைகளைக் கடத்தியதாகக் கருதப்படும் ஒரு காரை கைப்பற்றியுள்ளதுடன் அதன் சாரதியையும் மற்றும்சிலரையும் கைதுசெய்துள்ளனர். இக்காரில் இலக்கத்தகடு அவற்றப்பட்டிருந்ததாகக் கூறப்பட்டது.

இதுசம்பந்தமாக மேலும் நால்வரைப் பொலிசார் தேடிக்கொண்டிருக்கின்றனர். (ந. நி.)

## 'நாட்டிற்காக உழைக்கவும்'

மஹார, செவ்வாய்

'உலகத்தில் இலங்கையில் உள்ளவர்கள் தான் கடனுக்கு சாப்பிட்டு வருபவர்களாக இருந்துவருகின்றார்கள். மக்கள் நாட்டிற்காக உழைக்கவேண்டும். அப்படி உழைத்தால் தான் நாடு முன்னேற்றமடைய முடியும்' என்று கல்விமந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்ல பொமிரியா மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

## கானாவில் தடுப்புக்காவல்

ஆக்ரா, ஏப். 6

கானாவில் 5 ஆண்டுகளுக்கு விசாரணையின்றிக் காவலில் வைக்கும் தடுப்புக்காவல் சட்டத்தை, புதிய அரசாங்கம் [illegible] அதியர் நிக்ருமாவால் கொண்டுவரப்பட்டது.

# யாழ். விவசாயியின் இருபெரும் தேவைகள்

## மந்திரிக்கு முதலியார் மகேசன் விளக்கம்

யாழ்ப்பாணம், புதன்

வடபகுதி விவசாயப் பொருள் விற்பனவு சமாஜம் நேற்றிரவு யாழ்ப்பாணம் வாடி வீட்டில் உணவு மந்திரி திரு. எம். டி. பண்டாவுக்கு அளித்த விருந்துபசாரமொன்றில் அதன் தலைவரான முதலியார் வை. மகேசன் யாழ்ப்பாணத்து விவசாயிகளின் இருபெரும் தேவைகள்பற்றி மந்திரிக்கு விளக்கம் சமர்ப்பித்தார். அவர்கூறியதாவது:

'யாழ்ப்பாணம் இலங்கையின் உணவுதேவைகளைப் பூர்த்திசெய்வதற்குப் பலவகையில் உதவுகின்றது. இங்கு உற்பத்தியாகும் சின்னவெங்காயம் இலங்கையின் முழுத்தேவைக்கும் போதாமலிருக்கிறது. உருளைக்கிழங்கு உற்பத்தி மிகவும் வேகமாக முன்னேறுகிறது. இந்த நிலையில் யாழ்ப்பாண விவசாயியின் இரு பெரும் தேவைகளை பூர்த்தி செய்தால்தான் இங்கே உணவுப் பொருட்களை வெற்றிகரமாக விளைவிக்கலாம் முதலாவதுதேவை தண்ணீர் வசதி. தண்ணீர் இல்லாமல் விவசாயம் செய்வது முடியாத காரியம். கிணற்று நீரை நம்பியிருக்கும் யாழ்ப்பாணத் தோட்டக்காரர் இன்னும் பத்துவருடங்களில் யாழ்ப்பாணம் பெரும்பாலைவனமாகிவிடுமென்று இஸ்ரவேல் நிபுணர் கூறியதையும் கேட்டிருக்கிறார்கள். நீண்டகால விவசாயத் திட்டங்களுக்கு நம்பிக்கையான நீர்ப்பாசன வசதி அவசியம். மகாவலி கங்கை வடமத்திய மாகாணத்துக்கும் பின்னர் வடமாகாணத்துக்கும் திருப்பப்பட்டால் அதன் இனிய நீரை யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கும் கொண்டு வர வழிவகை செய்யவேண்டும்.

'அந்நிய செலாவணியை மிச்சம்பிடிப்பதற்காக நீர் இறைக்கும் யந்திரங்களின் இறக்குமதியை அரசாங்கம் மிகவும் குறைத்துவிட்டது. யாழ்ப்பாண விவசாயியை இது பெரிதும்பாதித்துவிட்டது. விவசாயத்துக்குத் தேவையான குறைந்தளவு தண்ணீர் 'பம்பு'களையாவது வடபகுதி விவசாயப் பொருள் விற்பனவு சமாஜம் போன்ற ஒரு விவசாயக்கழகத்தின்மூலம் கமக்காரருக்கு விநியோகம் செய்ய அரசாங்கம் முயலவேண்டும். அத்துடன் தண்ணீர்ப் 'பம்பு'களின் உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்வதற்கும் லைசென்ஸ் வழங்க வேண்டும்.

'இரண்டாவதாக, யாழ்ப்பாணத்திலுள்ள பல்வேறு நிலங்களின் தன்மையையறிந்து இன்ன மண் இன்ன பயிருக்கு உகந்ததென்று விவசாயிகளுக்கு ஆலோசனை கூறுவதற்கு இங்கே ஒரு நில வள ஆராய்ச்சி நிலையம் நிறுவப்படவேண்டும். நிலப்பண்பாட்டு நிபுணர் ஒருவர் இதில் எப்பொழுதும் இருந்து வேலை செய்யவேண்டும்'.

மந்திரி திரு. பண்டா இதற்குப் பதிலளிக்கையில், தலைவர் கூறிய விஷயங்களைத் தாம் உணர்ந்து கொண்டதாகவும் யாழ்ப்பாண விவசாயிகளின் குறைகளை நிவர்த்திசெய்ய தம்மாலானதை செய்வதாகவும் கூறினார்.

# "ஒற்றுமை சக்திகளை ஒன்றுபடுத்துவதே இலட்சியம்"

## பஹாய் இயக்ககூட்டம்

உடுப்பிட்டி, புதன்

'ஒற்றுமைப்படக்கூடியசக்திகள் யாவற்றையும் ஒன்றுபடுத்தி, உலகில் சமாதானத்தையும் நீதியையும் நிலைப்படுத்துவதற்காக ஒவ்வொருவரும் பாடுபடவேண்டும் என்பதே பஹாயுல்லாவின் கொள்கையாகும். உலகமக்கள் அனைவருக்கும்பொதுவாக ஒரு மொழியையும் அனைவருக்கும் ஒரே கடவுளையும் உண்டாக்குவதுடன் சர்வதேசநீதிமன்றத்தையும் உருவாக்குவதே உலக பஹாய்களின் நோக்கம். உலகில் சகல பிள்ளைகளுக்கும் சமமான கல்வி வசதிகள் அளிக்கப்படதேண்டும்'.

இவ்வாறு வதிரியில் நடைபெற்ற பஹாய் இயக்க 19-வது நாள் விருந்து வைபவத்துக்குத் தலைமை வகித்த திரு. சி. கிருஷ்ணபிள்ளை பேசுகையில் கூறினார்.

திருவாளர்கள் கே. அம்பலவாணர், எஸ். தர்மரத்தினம், கே. குமரேசன், க. பேரம்பலம் ஆகியோரும் பேசினர்.

சமீபத்தில் கொழும்பில் நடைபெறவிருக்கும் பஹாய் இயக்கமகாநாட்டில் கலந்து கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது. திரு. செ. சுவர்ணராசா நன்றிகூறினார்

## 'திருமலையில் பல்கலைக்கழகம்'

திருக்கோணமலை, புதன்

இலங்கைவாழ் தமிழ் பேசும்மக்களுக்கெனதமிழ்ப் பல்கலைக்கழகமே தேவை. ஒருசிலர் கோருவதுபோல் கலாசாரப் பல்கலைக்கழகமல்ல. வடக்கு மாகாணத்திற்கும் கிழக்கு மாகாணத்திற்கும் மத்தியிலான ஒரு இடத்தில்தான் தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவப்படவேண்டும். அந்த இடம் திருக்கோணமலையாகத்தான் இருக்கமுடியும்."

மேற்கண்டவாறு தமிழரசுக்கட்சிப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி, திருமலை முற்றவெளியில் திரு. மாணிக்கராசா தலைமையில் நடைபெற்ற அமரர் ஏகாம்பரம் நினைவுதினக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், மன்னார் எம். பி. திரு. அழகக்கோன், திரு. ஆலாலசுந்தரம் உட்படப் பலர்பேசினர்.

## விநாயகர் உற்சவம்

பருத்தித்துறை, புதன்

கரவெட்டிகிழக்கு யாக்கரு விநாயகர் ஆலய வருடாந்த உற்சவங்கள் தொடர்ந்து பத்துதினங்களாக நடைபெற்று நேற்று [illegible]தினம் நடைபெற்ற தேர், தீர்த்த உற்சவங்களுடன் நிறைவெய்தியது.


பிரவேசங்கள்

ஜி. சி. ஈ. சாதாரணம் கலை/விஞ்ஞானம்/ வர்த்தகம், உயர்தரம் கலை/ விஞ்ஞானம், பிறெப்: விஞ்ஞானம் வகுப்புக்களுக்கு இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்படும். விடுதி வசதிகள் உண்டு.

ஐக்கியகலாசாலை
நெல்லியடி, கரவெட்டி/
107, பருத்தித்துறைவீதி
நல்லூர், யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோடு
வழக்கு இலக்கம் 827
தத்துவக்காரர்
1. வேலுப்பிள்ளை முத்துலிங்கமும்
2. பெண் கதிரமலையும் கரவெட்டி வடக்கு
எதிராக
1. சின்னத்தம்பி கைம்பெண் தங்கமுத்து
2. சின்னத்தம்பி கனகரத்தினம்
3. சின்னத்தம்பி ஆறுமுகம்
4. சின்னத்தம்பி மகள் மாணிக்கம்
5. சின்னத்தம்பி கிருஷ்ண பிள்ளை
6. சின்னத்தம்பி மகள் சற்குணதேவி
7. சின்னத்தம்பி மகள் கலைமாலினி
8. சின்னத்தம்பி மகள் பிரேமாவதி

3,4, 5,6,7, 8 மைனர்கள் 1-ம் எதிரி இவர்களுடைய பராமரிப்புக்காரன் 213-ம் நம்பர் யூனிற், முரசுமோட்டை, பரந்தன்.

மேற் குறித்த வழக்கில் தீர்ந்த தீர்வையின் படியும் குறித்தகோர்ட்டார்எனக்கு அனுப்பிய கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படுமாதனம் 1966-ம் ஆண்டு சித்திரை மாதம் 30-ம்தேதி சனிக்கிழமைமுற்பகல் 9 மணியளவில் குறித்த ஆதனவிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதனடாப்பு

வடமாகாண யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கட்டைவேலிக் கோயிற்பற்று கரவெட்டி குறுளிக் குறிச்சியிறை பழனியாவத்தைநிலப்பரப்பு 22 1/4 இதில் தெற்குப்பக்கமாக நிலப்பரப்பு 7 1/4 இதில் வடக்கரைவாசிக்கு நிலப்பரப்பு 3 5/8 எல்லை கிழக்கு கந்தவனம் முருகேசுவுக்கும் மறுபேருக்குமுடையவாதனம். வடக்கு பொன்னையா கைம்பெண் செல்லாச்சிக்கும் மறுபேருக்குமுடையவாதனம். மேற்கு நமசிவாயம் பெண் சின்னதங்கச்சியினுடைய வாதனம். தெற்கு சின்னத்தம்பி மயில்வாகனத்துக்கும் மறுபேருக்குமுடையவாதனம். இவ்வெல்லைகளுக்குட்பட்டவையடங்கலும் இக்காணிக்கு மேற்கேயிருக்கும் மாதிரியொல்லை என்னும் காணிக்குள்ளிருக்கும் கிணற்றிலிதற்குரிய பங்கும் வழி வாய்க்காலுரித்தும்.

கா. முத்துக்குமாருஐயர்
கொமிஷனரும்,
விலைமதிப்பாளரும்.
109

## கரபந்தாட்டம்

வலிகாமம், புதன்

அத்தியார் இந்துக்கல்லூரியில், அத்தியார் இந்துக்கல்லூரிக்கும், அச்சுவேலி கிறிஸ்தவகல்லூரிக்குமிடையே நடைபெற்ற சாம்பியன் போட்டியில் அச்சுவேலி கிறிஸ்தவ கல்லூரி வெற்றியீட்டியது. போட்டியை அடுத்து நடைபெற்ற பரிசளிப்பு வைபவத்திற்கு ஆசிரியர்சங்கத் தலைவர் திரு. க. இராசரத்தினம் தலைமைவகித்தார். பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டகோப்பாய் எம்.பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை பேசுகையில் நாட்டின் பொருளாதார விருத்தியில் போதிய கவனம் செலுத்தும் தேசியஅரசாங்கம் விளையாட்டுத் துறைக்கும் பிரத்தியேக அமைச்சை ஏற்படுத்தி உதவுவது எதிர்கால சந்ததியின் ஆரோக்கிய வாழ்வுக்கு வித்திட்ட செயலாகும் என்றும், இப்போட்டியில் கலந்து கொண்ட இரண்டு கல்லூரிகளும் பாராட்டுக்குரியன என்றும்கூறி 'வன்னியசிங்கம் வெற்றிக்கிண்ணத்தை. அச்சுவேலி கிறிஸ்தவக் கல்லூரித் தலைவரிடம் வழங்கினார். போட்டி அமைப்பாளர் திரு. வை. தம்பிஸ் வரன் நன்றி கூறினார்.

# "தேசிய பிரச்னைகளுக்கு முக்கியத்துவமளிக்கவேண்டும்"

## கோப்பாய் தொகுதியில் உணவு மந்திரி பண்டா

குரும்பசிட்டி, புதன்

"நாட்டின் நலன்கருதி தேசியப் பிரச்னைகளை முதலில் முக்கியமாகத் தீர்க்க வேண்டும். அரசியல் சிக்கல்களில் கவனம் செலுத்துவதைவிட தேசியப் பிரச்னைகள்மீது அதிக சிரத்தை எடுப்பதன்மூலம் பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்கமுடியும். வடக்கு கிழக்குப் பகுதி மக்களின் பூரண ஒத்துழைப்புடன் நமது பிரதமர் டட்லி தேசியஅரசாங்கத்தினை நிறுவியுள்ளமைமிக மகிழ்ச்சிக்குரியது. தேச அபிவிருத்திக்கு நாட்டின்பெரும்பான்மை இனத்தவரான சிங்களவர்களும், சிறுபான்மைமக்களாகிய தமிழர்களும் மற்றும்சகலசாகியத்தினரும் ஒற்றுமையாக நெருங்கி உழைக்கவேண்டும் என்பதே தேசிய அரசின் விருப்பமாகும். கடந்த காலங்களில் ஒருபகுதி மக்கள் மத்தியில் மனக்கிலேசம், சிக்கல்கள் நிறைய ஏற்பட்டன."

இவ்வாறு உணவு விவசாய மந்திரி திரு எம்.டி. பண்டா கோப்பாய்த் தொகுதியில் உத்தியோகரீதியில் சுற்றுப் பிரயாணம் செய்தபோது புத்தூர், நிலாவரை, நவக்கிரி ஆகிய கிராமங்களில் அளிக்கப்பட்ட வரவேற்பு உபசாரங்களுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். அமைச்சருடன் நிரந்தரக் காரியதரிசி திரு. பி. மகாதேவா, விவசாயப்பகுதி டைரக்டர், அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா ஆகியோரும் விஜயஞ் செய்திருந்தனர். நிலாவரைச் சந்தியில் வைத்து அமைச்சரும்கோஷ்டியினரும் கோப்பாய் எம். பி. திரு சி. கதிரவேலுப்பிள்ளைபுத்தூர்கிராமசபைத் தலைவர் ஆகியோர் வலி.கிழக்குவிவசாயச் சபையினரால் மலர்மாலைகள் அணிவித்து வரவேற்கப்பட்டனர்.

முதலில் மந்திரி பண்டா நிலாவரைநீர்ப்பாசனத் திட்டத்தைப் பார்வையிட்டதுடன் நவக்கிரியைச் சேர்ந்த திரு. பொன்னரின் உருளைக்கிழங்குச் சாகுபடியைப் பார்வையிட்டனர். பின்னர் திரு. சி. சங்கரப்பிள்ளையின் தோட்டத்தில் அறுவடையை ஆரம்பித்து வைத்தார்.

திரு. பண்டாமேலும்குறிப்பிட்டதாவது:—

யாழ்ப்பாணம், வவுனியா, அநுராதபுரம் போன்ற வரண்ட பிரதேசங்களில் மிளகாய், உருளைக்கிழங்கு, வெங்காயம்போன்ற உபஉணவுப் பொருட்களைப் பயிரிட்டு உற்பத்தி செய்வதால் நாட்டின் வெளிதேச செலாவணி மிச்சமடையும். இத்துடன் பிறநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்யும் உபஉணவுப் பொருட்களையும் ஓரளவு குறைக்க முடியும். தற்போது பெல்ஜியம், ஒல்லாந்து, இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கு அன்னிய செலாவணி மூலம் சுமார் ஆயிரம் லட்ச ரூபாய் வீண் விரயம் செய்யப்படுகிறது. இவற்றை நமதுதேசத்தில் உற்பத்தியாக்குவதால் சுயதேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளலாம். அன்னிய செலாவணியாகக் கரைந்துபோகும் பெருந்தொகைப்பணத்தை உற்பத்தியாளர்களுக்கு வழங்கவும் செய்யலாம். எனதுவிஜயத்தினால் உங்கள்பகுதி எம். பி. க்களுடனும் அரசாங்க அதிகாரிகளுடனும் கலந்து பேசி அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்க வாய்ப்புஏற்பட்டுள்ளது. எனவே தமிழ் மக்களும் இதில் ஒத்துழைத்து தேசியப் பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ள உதவியும் ஒத்துழைப்பும் தாருங்கள்

அரசாங்கம் உத்தரவாத விலைத்திட்டத்தை அமுல் நடத்தி விவசாயிகளுக்குப் பொருள் நஷ்டமின்றியும் அதிக வருவாயையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இதனால் கறுப்புச்சந்தைக்காரரும் ஒழிக்கப்படுகின்றனர். ஒரு அந்தர் உருளைக்கிழங்கு 110 ரூபாய் முதல் 160ரூபாய்வரையில் இறக்குமதி செய்யப்படுகிறது. ஆனால் எம் உற்பத்தியாளரிடம் ஒரு அந்தர் 252 ரூபாய் கொடுத்து வாங்கிக்கொள்கிறது. எனவே இருமடங்கு பணம் கொடுத்துக் கொள்வனவுசெய்து விவசாயிகளை மேலும் உற்சாகப்படுத்தி ஊக்கமளிக்கிறோம். இதைவிடப் பயிர்ச்செய்கைக்குக் கடன்களும் வழங்கப்படுகிறது. நெல் மற்றும் உணவுப்பொருட்கள் உற்பத்தியாக்குவோருக்கு கால் ஏக்கருக்கு 200 ரூபா வீதமும் உருளைக்கிழங்கு செய்கைக்கு விசேஷமாக கால்ஏக்கருக்கு 250 ரூபாவும் மான்யம் வழங்கிவருகிறோம்.

கோப்பாய் எம். பி. திரு கதிரவேற்பிள்ளை அமைச்சரை வரவேற்றுப்பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"சாதிமத பேதங்களின்றி மக்கள் சகோதரர்போல ஒற்றுமையாகத் தற்போது வாழ்கின்றனர். உணவுமந்திரி தேசிய அரசாங்கத்தை உருவாக்கிய யு. என். பியின் முக்கிய பிரமுகர் முன்னர் அமைச்சர்கள் தமிழ்ப் பகுதிகளுக்கு வந்தபோது கறுப்புக்கொடிகள் தான் வரவேற்றன. ஆனால் இன்று மக்கள் மனங்குளிர ஒரு நாட்டவர்ஒரேமக்களென்ற ரீதியில் சகோதரத்துவ முறையான வரவேற்பளிப்பது மகிழ்ச்சிக்குரியது."

இதற்கு முன்னர் மந்திரி தமது குழுவுடன் ஈவினைப் பகுதியில் காணி மீட்புச் சம்பந்தமான இடங்களையும் பார்வையிட்டார்.

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

குரும்பசிட்டி, புதன்

யாழ் விளையாட்டுக்கழகங்களுக்கான, ஓர் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியினை குரும்பசிட்டி உதய தாரகை மன்றத்தினர் நடத்திவருகின்றனர். பல விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றியுள்ள இச் சுற்றுப்போட்டி சென்ற திங்கட்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

## லூனர் 10

ரஷ்ய 'லூனர் 10' கிரகம் 8 நிமிடம் தொடர்ந்து அனுப்பிய சமிக்ஞைகளை பிரிட்டிஷ் ஜோர்டல்பங்க் அவதான நிலையம் பெற்றது.

இதற்கிடையில் ரஷ்யா வெகுவிரைவில் இரு வான வெளிவீரர்களை நீண்ட பய[illegible] இவர்கள் 5 வாரம் வானசஞ்சாரம் செய்வார்கள்.

# வரி விளம்பரம்

### தேவை

அனுபவமுள்ள பிளேட்டன் மெசின் மைண்டர் தேவை. உடன்விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 17, ஈழநாடு மே/பா.எனஎழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 17

மிளகாய் அரைக்க நெல் குத்த நன்கு அனுபவம் உள்ள ஆட்கள் உடனடியாகத்தேவை நேரில் மனுச்செய்க: செல்லம்ஸ் மில்ஸ், நெல்லியடி, கரவெட்டி. 20

கொழும்பிலுள்ள ஒரு தமிழரின் குடும்பத்துக்கு அனுபவமுள்ள சமையல் பெண் தேவை. தகுந்த ஊதியம் அளிக்கப்படும். விளம்பர இல. 30, ஈழநாடு மே. / பா. என எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 30

நெசவு வேலையில் பயிற்சி உள்ள பெண் பிள்ளைகள் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும் தங்கும் இட வசதி உண்டு. விபரங்கட்கு அருணகிரி இன்டஸ்றீஸ், சிவன் ரேட், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 22

அருணா புத்தகநிலையத்தைப் பொறுப்பேற்று நடத்தக்கூடிய பங்காளி ஒருவர் தேவை. நேரில் பேசவும். அருணாபுத்தகநிலையம், 61, பெரியகடை, யாழ்ப்பாணம். 31

நேர்மையும், பொறுப்புணர்ச்சியும் வியாபார அனுபவமும் போதிய பிணை கட்டக்கூடியவருமான ஒரு மனேஜர் தேவை. தகுதி நோக்கிச் சம்பளம் கொடுக்கப்படும். நேரில் பேசவும். அருணா புத்தக நிலையம், 61, பெரிய கடை, யாழ்ப்பாணம். 32

### விற்பனைக்கு

(Caustic Soda Solid) எட்டு அந்தர் டின் கோஸ்றிக் சோடா விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: 86, கச்சேரி நல்லூர் ரேட், யாழ்ப்பாணம். 19

மாங்குளம் ஸ்டேசன் ரேட்டில் இரும்புச் சாமான்கள் தளபாடங்களுடன் விற்பனைக்கு இருக்கின்றன. விரும்பியவர்கள் நேரில் வந்து சந்திக்கவும். இ. ஆ. சுப்பிரமணியம் 27

ஒரு (Junior Wolseley) தண்ணீர் பம்பு, வண்டி, பைப்புடன் நலல நிலைமையில் விற்பனைக்கு உண்டு. யாழ்ப்பாணம் Autos கம்பெனியில் பார்வையிடலாம். அல்லது விளம்பர இல. 28 ஈழநாடு, மே. / பா. என எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 28

நான் கண்ட பாரதி ஆராய்ச்சிக் கட்டுரைகள், விலை 3-75 கிடைக்குமிடங்கள்: ஸ்ரீலங்கா புத்தகசாலை 234, K. K. S. ரேட், யாழ்ப்பாணம். செல்வன் N. C. A வரதன், கம்பன் கலைப்பண்ணை மூதூர். 3. V. P. P. மூலம் பெறுக்கொள்ளலாம். 29

### வைத்தியம்

தொய்வு, சுசம், நீரிழிவு, இரைந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### காணவில்லை

8 வயதுடைய கறுப்புநிற முள்ளபையனைக்காணவில்லை அடையாளம்இடது கன்னத்தில் ஒரு தளும்புண்டு. சாம்பல் நிறக் காற்சட்டை அணிந்திருக்கிறார். வாய் பேசமாட்டார்நன்றாக பையனின் செயர் சந்தரராஜ். பையனைக்கண்டவர்கள்கீழ்க் காணும் விலாசத்திற்குத் தயவுசெய்து தெரிவிக்கவும். 54, மணிக்கூட்டு ரேட், யாழ்ப்பாணம். 33

## இன்னிங்ஸால் வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

யாழ் டெயிலிமிரர் விளையாட்டுக்கழகத்திற்கும் வட்டுக்கோட்டை ரேயல்விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே வட்டுக்கோட்டையில் நடைபெற்ற சிநேகபூர்வமான விளையாட்டுப்போட்டியில் யாழ் டெயிலிமிரர் விளையாட்டுக்கழகம் 1 இன்னிங்ஸாலும்29 ஒட்டங்களாலும் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ் டெய்லிமிரர் கழகத்தினர் 117 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை முடித்தனர். இதில் அன்ரன்சேவியர் ஆட்டமிழக்காமல் 64 ஓட்டங்களை எடுத்தார். யோ. அலன் 31 ஓட்டங்களை எடுத்தார் ரேயல் பந்தெறி வீரர் ரவீந்திரன் பல விக்கெட்டுகளை வீழ்த்தினார். பின்னர் துடுப்பெடுத்தாடிய ரேயல் கழகத்தினர் 59 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை முடித்துக் கொண்டனர். இதில் ரவீந்திரன் 14 ஓட்டங்களையும் வில்லியம்ஸ் 12 ஓட்டங்களையும் எடுத்தனர். யாழ்டெயிலிமிரர் பந்தெறி வீரர்களான சிறில், அலன், பற்றிக் ஆகியோர் முறையே 4, 2, 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய ரேயல்கழகத்தினர் 29 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை முடித்துக்கொண்டனர். யாழ் டெயிலிமிரர் பந்தெறி வீரர்களான சிறிலும் அலனும் 4 விக்கெட்டுகள்வீதம்வீழ்த்தினர். இதில் வில்லியம்ஸ், மகேசன் ஆகியோர் முறையே 12, 11 ஓட்டங்களை எடுத்தனர்.

யாழ்ப்பாணம், புதன்

நல்லூர் தெற்கு சனசமூக நிலயத்தின் 17-வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் பொருட்டு நிலயத்தின் விளையாட்டுக் குழுவடபிரதேசத்தில் சகலரும் பங்குபற்றுவதற்கான 5 மைல் மரதன் ஓட்டப்போட்டியையும் 15 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டியையும் ஒழுங்கு செய்து அதில்பங்குகொள்ளுமாறு வடபிரதேசத்தில் உள்ள சகல சனசமூகநிலயங்களுக்கும் அழைப்பு விட்டிருக்கிறது. மேற்படி நிலயத்தின் கலைக்குழு வடபிரதேசத்தின் கலைஞர்களால் சிருஷ்டிக்கப்பட்ட ஓவியங்கள், சிற்பங்கள், விநோதப் பொருட்கள், மண்வேலைகள், பன்னவேலைகள் கொண்ட ஒரு கலைப் பொருட்காட்சியை நடத்தவும் ஒழுங்குசெய்துள்ளது.

## 150 டாக்டர்கள்தான்!

கொழும்பு, புதன்

இனி வருடாவருடம் 150 டாக்டர்களையே அரசாங்கம் எடுக்குமென்றும் இதனால் டாக்டர்களாகவெளியேறும் மிகுதிப்பேர் தனிப்பட்ட முறையில் தொழில்புரிய வேண்டி யேற்படுமென்றும் தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோள்என் செய்யும்?

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பஞ்சாங்கங்கள் வித்தியாசப்படுவது இலங்கையில் மட்டுமல்ல. இந்தியாவில் 51 பஞ்சாங்கங்கள் கணிக்கப்படுகின்றனவாம்!

திருக்கணிதத்தின் படிக்கு சனிபகவான் இம்மாதம் 8-ந்திகதி (நாளை) கும்பராசியிலிருந்து மீனராசிக்கு கடக்கிறார். இதனால் சிலருக்கு ஏழரைச்சனி, அட்டமத்துச் சனி நீங்குதலும் சிலருக்கு அவை உண்டாகுதலும் குறிக்கப்படுகிறது. வாக்கிய பஞ்சாங்கத்தின் படிக்கோ சனிபகவான் இவ்வருடம் மாசிமாதம் 26-ம் திகதி தான் கும்பத்திலிருந்து பிரிந்து மீனத்துக்குப் போகிறார். கிட்டத்தட்ட ஒரு வருட வித்தியாசம்!

வாக்கியத்தில் ஆடிமாதம் 31-ந் திகதி மிதுனராசியிலிருந்து கற்கடகராசிக்குப் போகும் குருபகவான் திருக்கணிதத்தில் ஆவணி மாதம் 4-ம் திகதி மாறுகிறார். ராகு கேதுக்கள் வாக்கியத்தின் படி இவ்வருடம் வைகாசி மாதம் 25-ந்திகதி மாறுகிறார்கள். திருக்கணிதத்தின் படி ஆனி 11-ந் திகதி மாறுகிறார்கள்.

பராபவ வருடப்பிறப்பு 13-4-66 புதன்கிழமை இரவு 8-10 க்கு நிகழ்கிறதென்று வாக்கியம் கூறுகிறது. திருக்கணிதம் அன்றிரவு 12-10 க்கு என்று தெரிவிக்கிறது. வாக்கியத்தின்படி விஷு புண்ணியகாலம் முடியும் நேரம் (12-10) திருக்கணிதத்தின்படி வருடம் பிறக்கிறது. திருக்கணிதத்தின் விஷு புண்ணியகாலம் ஆரம்பமாகும் நேரம் (8.10) வாக்கியத்தின் படி வருடம் பிறக்கிறது.

பிரபல சிங்கள சோதிடரான புலத்சிங்கள என்பவரும் திருக்கணித முறையையே பின்பற்றுகிறார் போலத் தெரிகிறது. சனி மாற்றத்தைப்பற்றி அவர் ஆங்கிலப்பத்திரிகை ஒன்றில் எழுதும்போது இலங்கைக்கு அதனால் ஏற்படக்கூடிய பலாபலன்களை விவரிக்கிறார். இராணி மாளிகையிலும் மந்திரிசபையிலும் பல மாறுதல்கள் ஏற்படுமென்றார், பிரதமர் டட்லிக்கும் மந்திரி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கும் கஷ்டமான காலமென்றும் அவர்களுக்கு காயம் ஏற்படவும் கூடுமென்றும் புலத்சிங்கள சாஸ்திரி கூறுகின்றார்.

சோதிடர்களிடையே எவ்வளவு வேற்றுமை பாருங்கள்! இவர் இப்படிக்கூற புரொபெஸர் கே. நடராஜா என்பவர் செல்லுகிறார்: பிரதமர், ஜே. ஆர். இவர்களுடைய சோதிடங்களில் சனி யோககாரகனாய் அமர்ந்து சுபகிரகமாகிய வியாழனால் பார்க்கப்படுகிறான், ஆகையால் இவர்கள் இருவரும் மேலும் முன்னேறி வெற்றி பெறுவதற்கு சனி குறுக்கே நிற்கமாட்டான். சனி கெட்டவனாயிருந்தால் இவர்கள் மீண்டும் வெற்றிவாகை சூடி முன்னணிக்கு வந்திருக்கமுடியாது.

பஞ்சாங்கங்கள் வித்தியாசப்பட்டாலும் சோதிடர்கள் சண்டை பிடித்துக் கொண்டாலும் 'கோள் என் செயும்' என்று அருணகிரிநாதர் கேட்டதுபோல் 'குமரேசர் இரு தாளை' நம்பியிருப்பவருக்கு எல்லாம் ஒன்றுதான்.

ஃ ஃ ஃ

'ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி பாம்பிரண்டு முடனே, ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே'.

REGAL—JAFFNA
NOW SHOWING!
JORGE MISTRAL
GIANNA MARIA CANALE
in
THE SWORD AND THE CROSS
(Total Scope - Color)

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எஸ். எஸ். ஆர். - விஜயகுமாரி நடித்த
பூம்புகார்

ராஜா
(யாழ்ப்பாணம்)
6-30, 9-45க்கு மட்டும்
நீதிக்குப் பின் பாசம்
கலரி 50 சதம்.
4-45க்கு மட்டும்
EUROPE by NIGHT

இன்றுமுதல் குதூகல ஆரம்பம்!
புத்தாண்டு வெளியீடு
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
போயா நாட்களில் 4 காட்சிகள்.
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை) மொடேர்ன் (பதுளை)
மொடேர்ன் (பண்டாரவளை) விஜிதா (ஹட்டன்) தீவொளி (நுவரெலியா)
நடிகர் திலகம்
சிவாஜி கணேசன்
(9 மாறுபட்ட வேடங்களில்)
சாவித்திரி
நடித்திருக்கும்
ஸ்ரீவிஜயலக்ஷ்மிபிக்சேர்ஸ
நவராத்திரி
இசை: கே. வி. மகாதேவன்
கதை, வசனம் ஏ. பி. நாகராஜன்

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கள்'' என்று கண்டிப்பான குரலில் ஒரு சவுக்கடி கொடுத்தார். 'கப்சிப்'. கூச்சல் அடங்கிவிட்டது. பேராசிரியரும் மேலே பேச முடிந்தது. காரியதரிசி அவ்விதம் நிலைமையை மிகச் சாமர்த்தியமாகச் சமாளித்ததைக் கண்டபோது எனக்கு மிகப் பெருமையாக இருந்தது. சமயவிஷயங்களிலே விரிந்த மனப்பான்மை காட்டும் அவருக்கு மேலான எதிர்காலம் காத்துள்ளது.

ஃ ஃ ஃ

இலங்கையிலே பல்லாண்டுகளாக ஆசிரியராகஇருந்து பல மேடைகளிலும் வீரமுழக்கம் செய்துவந்த வித்துவான் வேலன் அவர்கள் அங்கு மாணவராகி கல்வி கற்று வருவதை அறிய வியப்படைந்தேன். பி. ஓ. எல். பட்டப் பரீட்சைக்கும் சித்தாந்த டிப்ளோமா பரீட்சைக்கும் ஏககாலத்தில்படிக்கின்றார் வித்துவான் அவர்கள் மாணவராக மாறி எவ்வளவு அடக்க ஒடுக்கமாக இருக்கிறார் தெரியுமா? நம்பவே முடியவில்லை.

இன்னும் அங்குள்ள நமது மாணவ மாணவிகள் ஒவ்வொருவரும் ஒரு மணி. ஈழத்துச் சிவானந்தன், ராஜாஜி, காமராஜ், அண்ணா இவர்களைப்போலவே பேசிக்காட்டி எங்களை எல்லாம் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைத்தார். வெளிநாட்டு மாணவர் மன்றத்தையும் நம்மவர்கள் தான் முன்னின்று நடத்துகின்றார்கள். முதலில் இலங்கை மாணவர் சங்கமாக இருந்தது. இப்போது ''வெளிநாட்டு மாணவர் சங்க''மாக விரிவடைந்து பெயர்மாறியுள்ளது. அதற்குத் தலைவர் பேராசிரியர் இராமநாதன் செட்டியார்தான். அவருக்கு ஆங்கிலப் பயிற்சி அதிகமில்லாவிடினும், தமது பேச்சை ஆங்கிலத்தில் எழுதி கச்சிதமாகப் படித்தார். புங்குடுதீவைச் சேர்ந்த சுந்தரலிங்கம் இன்னிசைக் கச்சேரி செய்து பன்முறை கரகோஷம் பெற்றார்.

துணைவேந்தர் உள்ளிட்டு எல்லாருமே எழுதித்தான் படித்தனர் ஆனால் நம் உடுப்பிட்டியார் முதலில் தமிழிலும் பின் ஆங்கிலத்திலும் செய்த பிரசங்க மாரி அங்கு எல்லாரது மதிப்பையும் பெற்றுவிட்டது. அவரது கம்பீரமான தோற்றமும், ஆணித்தரமான பேச்சும், ஈழத்தின் மதிப்பையே அங்கு உயர்த்துவதாக இருந்தது. இன்னும் எவ்வளவு எழுதவேண்டும். இடமில்லையே!

ஃ ஃ ஃ

தமிழ் கற்பதற்காகப் பாரிஸிலிருந்து ஓர் அழகான இளம் பெண் வந்திருக்கிறார். பாரிஸ் புத்தகசாலையிலுள்ள தமிழ்ப்புத்தகங்களை வரிசைப் படுத்துவதற்காக, தமிழ்கற்றுவர அவரை உபகாரச் சம்பளம் கொடுத்து அனுப்பியிருக்கிறார்களாம்! நம் மாணவர்களிடம் அவர் தமிழ் பேசக் கற்றுக்கொண்டு, தமிழ்ச் சொற்களை உச்சரிக்க முயலுவதைப்பார்த்து, ஓர் அன்பர் ''கிளி கொஞ்சுகிறது'' என்றார்.

தமிழருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் ஒரு ஒற்றுமையைக் கண்டதாக அந்தப் பிரெஞ்சு மாணவி சிரித்துக் கொண்டே சொன்னார். என்ன ஒற்றுமை தெரியுமா? தங்களது பெருமைகளைப் பற்றி பிரமாதமாகப் பேசுவது தானாம்!

ஃ ஃ ஃ

செலாவணி முதலிய சங்கடங்கள் பல இருந்தும் பொதுவாக அங்கு கல்வி பயிலும் நமது மாணவ மாணவிகளை அதிர்ஷ்டக் [illegible] வேண்டும். [illegible] கூடுமான உதவிகளைச் செய்ய நமது எம். பிக்கள் முயலுவதுடன், அதிமானவர்கள் அங்கு சென்று பல கலைகளையும் கற்று இங்கு வந்து மேலான பணி செய்யவும் அரசாங்கம் புதிய வாய்ப்புக்களை அளிக்க வேண்டியது மிகமிக அவசியமாகும்.

ஃ ஃ ஃ

கட்டப்பட்டு கவலையில் வீழாதே, பொட்ட வல்லுயிர் போவதன் முன்னம் நீர், கிட்டனூர் திருவேட்களங் கைதொழப், பட்ட வல்வினையாயின பாறுமே.

—அப்பர் சுவாமிகள்.

றோயல் - மத்தியகல்லூரி கிரிக்கெட் மோதல்

## வெற்றி தோல்வியின்றி முடிந்தது

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும், கொழும்பு றோயல் கல்லூரிக்குமிடையே யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இரண்டு நாள் கிரிக்கெட் போட்டி நேற்று, வெற்றி தோல்வியின்றி முடிவடைந்திருக்கிறது.

மத்திய கல்லூரி தனது முதல் இன்னிங்ஸில் 110 ஓட்டங்களும், இரண்டாம் இன்னிங்ஸில் 9 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 195 ஓட்டங்களும் எடுத்தது.

றோயல் கல்லூரி தனது முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 157 ஓட்டங்களும் இரண்டாம் இன்னிங்ஸில் (ஆட்ட நேரம் இறுதிவரை) ஆறு விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 89 ஓட்டங்களும் எடுத்தது.

(இக் கிரிக்கெட் பற்றிய விபரங்கள் நாளைய 'ஈழநாடு'-ல் வெளியிடப்படும்.)

நீச்சல் வீரருக்கு

## ராதாகிருஷ்ணன் பாராட்டு

புதுடில்லி, ஏப். 6

பாக்கு நீரிணையை வெற்றிகரமாக நீந்திக் கடந்த மிகிர் சென்னின் சாதனையை ஜனாதிபதி ராதாக்கிருஷ்ணன் பாராட்டியிருக்கிறார். சென்னின் அனுபவம், தைரியம், திறமை ஆகிய குணங்களே இச்சாதனைக்குக் காரணமென அவர் கூறியிருக்கிறார்.

கடற்படைத் தலைவர் வைஸ் அட்மிரல் சட்டர்ஜியும் சென்னுக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளார்,

தனுஷ்கோடிக்குநீந்தி வந்த மிகிர் சென்னை ஏராளமான மக்கள் ஆரவாரம் செய்து வரவேற்றனர்,

## தேர்தல் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி

தென நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா தீர்ப்பளித்தார். செலவு தொகையில் பாதிகொடுக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

தொடங்கஸ்லந்தை தொகுதியிலிருந்து திரு. ஆர். ஆர். டபிள்யு. ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டது தகுதியற்றது என நீதிபதி மாணிக்கவாசகர் தீர்ப்பளித்தார். முழு செலவுதொகையும் செலுத்துமாறு மனுதாருக்கு உத்தரவிடப்பட்டது.

அதேசமயம் அம்பாறைத் தேர்தல் ஆட்சேபனைமனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றது. நீதியசர் திரு. டி. எஸ். பெர்னாண்டோ இத்தீர்ப்பை வழங்கினார்.

## சமூக ஜோதி சி. தியாகராஜா

யாழ்ப்பாணம், வியா.

சமூகஜோதி கேட்முதலியார் சி. தியாகராசாவுக்கு நேற்றுடன் 77 வயதாகின்றது.

சமூகஜோதி தியாகராஜா சிறந்த சமூகத் தொண்டராகவும் தமிழ் அபிமானியாகவுமிருந்துள்ளார், அவர் இலங்கை சைவபரிபாலன சபை போன்ற ஸ்தாபனங்களில் சேர் பி. அருணாசலம் போன்ற பெரியோர்களுடன் சேர்ந்து சிறப்பான சைவத்தொண்டும் புரிந்திருக்கிறார்.

## வகுப்புவாதக் கூச்சல் இல்லை!

கொழும்பு, புதன்

மேதின ஊர்வலத்தில் வகுப்புவாதக் கோஷங்களுக்கு இடமளிப்பதில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவைகளின் விசேஷ குழு தீர்மானித்தது.

## 30 யார் துணி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கு வர்த்தக மந்திரி எம். வி. பி. பீரிஸ் ஏற்பாடு செய்துள்ளார்.

அந்தந்தப் பகுதி காரியாதிகாரியினதோ அன்றி, கிராம சேவகரினதோ அத்தாட்சிப் பத்திர மூலம் இந்த 30 யார் காரிக்கன் துணியை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் பெற்றுக்கொள்வதற்கு மந்திரியின் இந்த ஏற்பாடு வகைசெய்கிறது.

மரணச் சடங்குகளுக்குத் தேவையான துணிகளைப் பெறுவதில் சிரமம் இருப்பதாக செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்தே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## பனம்பொருள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மானதென்றும் சொன்னார். ஊழல் நிலவுவதாகக்கண்டு பிடிக்கப்பட்ட சில அரிசி மில்களின் லைசன்ஸ் ரத்துச் செய்யப்பட்டிருப்பதாயும் ஊழியர்கள் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டிருப்பதாயும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

நெல்உற்பத்தியில் அதிகம் முன்னேறியுள்ள யாழ்ப்பாணமாவட்டத்தில் மாதத்துக்கு 3 வாரமாவது கூப்பனுக்கு நெல் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்ற திரு. துரைரத்தினம் எம். பி யின் கோரிக்கையும் அமைச்சரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பிண்ணாக்கு, கோழித்தீன் ஆகியவற்றுக்கு இருந்துவரும் தட்டுப்பாடு விரைவில் போக்கப்படுமெனவும் அவர் வாக்குறுதியளித்தார். பனம்பொருள் ஆராய்ச்சி சம்பந்தமாக வெளிநாட்டுக்கு ஒருவரையனுப்பிப் பயிற்சி பெறச்செய்யவும் அமைச்சர் சம்மதம் தெரிவித்தார்.

(நநி)

## விற்பனைக்கு

யாழ்ப்பாண இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். 465 காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 35

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு எப்ரல் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org